## 6.6 மூன்றடுக்கு ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிலையான மாதாந்திரப் பயணப்படியினை உயர்த்தி அளித்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி1) துறை

அரசாணை (பத்தாண்டுகள்) எண்.569 நாள் : 28.9.2007

படிக்க :

1. அரசாணை எண். (நிலை) 362, ஊரக வளர்ச்சித் (சி1) துறை, நாள் 20.12.1997.
2. அரசாணை எண். (நிலை) 226, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 25.10.1999.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடித எண்.101950/04/ பரா.அ.1.3, நாள் 10.3.2005 மற்றும் 15.8.2007

**ஆணை**

ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் மாவட்டத்திற்குள் பயணம் மேற்கொள்வதற்கான நிலையான பயணப்படி பின்வருமாறு நிர்ணயித்து பார்வை 1–இல் கண்டுள்ள அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன –

| | | | |
|---|---|---|---|
| அ) | ஊராட்சித் தலைவர்கள் | : | ரூ. 300/– |
| ஆ) | ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | : | ரூ. 500/– |
| இ) | ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் | : | ரூ. 200/– |
| ஈ) | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | : | ரூ. 1000/– |
| உ) | மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் | : | ரூ. 300/– |

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இந்த தொகை 10 சதவிகிதம் உயர்த்தப்பட்டு மாதத்திற்கு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு ரூ.330/– ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்களுக்கு ரூ.550/–, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.220/–, மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு ரூ.1,100/– மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கு ரூ.330/– என அனுமதித்து ஆணையிடப்பட்டது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், இத்தொகையில் 1999–ஆம் ஆண்டுக்குப் பின் எவ்வித மாறுதலும் செய்யப்படவில்லை எனினும் இந்த மூன்றடுக்கு ஊராட்சித் தலைவர்களின் பணி பின்வரும் காரணங்களால் அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார் –

i. கிராம ஊராட்சியின் நிர்வாக அலுவலர்கள் என்ற வகையில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களான இந்திரா நினைவுக் குடியிருப்பு திட்டம், சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் திட்டம், முழு சுகாதார இயக்கம் போன்ற திட்டங்களை செயல்படுத்தவேண்டும்.

ii. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் பணிகள் நடைபெறும் இடங்களில் கட்டாயமாக தங்கி கண்காணிக்கவேண்டியுள்ளது. மேலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை திறம்பட செயல்படுத்த ஊராட்சி மன்றத் தலைவர் பணிகளை மேற்பார்வை செய்வது மட்டுமல்லாமல் பிற துறைப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த தேவையான தொடர்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்துவதுடன் ஊராட்சி மன்றத் தலைவர் தெருவிளக்கு மற்றும் கிராம குடிநீர் திட்டங்கள் சிறப்பாக செயல்பட தேவையான உதிரி பாகங்களை ஏற்பாடு செய்ய ஊராட்சிக்கு வெளியிலும் பல பயணங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வட்டாரம், கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றம் இதர அலுவலர்கள் நடத்திடும் கூட்டங்களில் இவர் கலந்துகொள்ள வேண்டியுள்ளது.

iii. கடந்த சில ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சியால் நிறைவேற்றப்படுகின்ற மத்திய (மற்றும்) மாநில அரசுத் திட்டங்களின் ஒதுக்கீடு அதிகரித்துள்ளது. அத்துடன் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் போன்ற புதிய திட்டங்களும்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதற்கு மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், அடிக்கடி இப்பணிகளைப் பார்வையிட வேண்டும்.

iv. இத்துடன் ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கத்தின் காரணமாக பல்வேறு வளர்ச்சி சம்மந்தப்பட்ட மக்கள் பிரச்சினைகளையும் தீர்வு செய்வதற்காக வட்டார மற்றும் மாவட்ட தலைநகரங்களுக்கு இவர்கள் பயணம் செய்யவேண்டி உள்ளது. வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படும் கூட்டங்களிலும் இவர்கள் பங்கேற்க வேண்டியுள்ளது.

4. மேலும், விலைவாசியின் காரணமாக பயணச் செலவு மற்றும் அதனோடு தொடர்புடைய செலவுகள் அதிகரித்துள்ளன. எனவே கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான நிலையான மாதாந்திரப் படியினை உயர்த்தலாம் எனவும் ஊராட்சி மன்றத் தலைவரின் பயணப்படியினை தற்போது வழங்கப்படும் ரூ.330/–லிருந்து ரூ.600/– ஆகவும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுடைய படியினை மாதம் ரூ.500/–லிருந்து ரூ.800/–ஆகவும், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுடைய படியினை மாதம் ரூ.220/–லிருந்து ரூ.500/– ஆகவும் மாவட்ட ஊராட்சித் தலைவருக்கான பயணப்படியினை ரூ.1100/–லிருந்து ரூ.1550/– ஆகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களுக்கான தொகையினை ரூ.330/–லிருந்து ரூ.600/– ஆகவும் அதிகரிக்கலாம் எனவும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலனை செய்தது. கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஆகியவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிலையான பயணப்படியினை பின்வருமாறு நிர்ணயம் செய்து ஆணையிடுகிறது.

| | | மாதம் ரூபாய் |
|---|---|---|
| 1. | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 500/– |
| 2. | ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | 750/– |
| 3. | ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் | 400/– |
| 4. | மாவட்ட ஊராட்சித் தலைவர் | 1500/– |
| 5. | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 500/– |

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.3042/FS/P/07, நாள் 25.9.2007ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்